**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.80/2022**

**தேதி : 25.10.2024**

**(பி.வா.சா.1) – திரு. மகுடீஸ்வரன்**

**சாட்சி அழைக்கப்பட்டு, 8, 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை : (8, 9 பிரதிவாதிகள் தரப்பில்)**

நான் கிரையம் வாங்குவதற்கு முன்பாக மூல ஆவணங்களைப் பார்த்தேனா என்றால் பார்த்தேன். தாவா சொத்து யாருக்கு ஆதியில் பாத்தியப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் கருப்புச்சாமியின் தகப்பனாருக்குப் பாத்தியப்பட்டது. கருப்புச்சாமியின் தகப்பனார் பெயர் சின்னச்சாமிகவுண்டர் என்றால் எனக்கு சரியாகத் தெரியவில்லை. சின்னச்சாமிகவுண்டருக்கு யார் யார் வாரிசுகள் என்ற விபரத்தை நான் தெரிந்துகொண்டேனா என்றால் கருப்புச்சாமி மட்டும் தான் வாரிசு. சின்னச்சாமிகவுண்டருக்கு இரண்டு மனைவிகள் என்பது கேள்விப்பட்டேனா என்றால் நான் விசாரித்த வரையில் அவ்வாறு தெரியவரவில்லை.

2. சின்னச்சாமிகவுண்டரின் இளையதாரத்து மகன் தான் வழக்கின் 3–ம் பிரதிவாதி கருப்புச்சாமி என்றால் சின்னச்சாமிகவுண்டருக்கு இரண்டு தாரம் என்று எனக்கு ஆவணங்களின்படி தெரியவரவில்லை. சின்னச்சாமிகவுண்டரின் மூத்த தாரத்துக்கு பெண் மக்கள் உள்ளார்கள் என்பதை தெரிந்துகொண்டேனா என்றால் வழக்கிற்குப் பின்பாகவும் விசாரித்துப் பார்த்தேன், அப்படி யாரும் இல்லை என்று தெரியவந்தது. சின்னச்சாமிகவுண்டருக்கு தெய்வாத்தாள் என்ற மூத்த மனைவி இருந்ததாகச் சொன்னால் தெரியாது. மூத்ததாரத்து மூலம் பிறந்தவர்கள் இறந்துபோன காளியாத்தாள், 1–ம் பிரதிவாதி பொன்னாத்தாள் மற்றும் பவுனாத்தாள் என்றால்

சரியல்ல. சின்னச்சாமிகவுண்டர் இறந்த தேதியை நான் தெரிந்துகொண்டேனா என்றால் தெரியாது. சின்னச்சாமிகவுண்டர் 09.12.2005 ஆம் தேதி இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் கருப்புச்சாமியின் தகப்பனாருக்கு வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை ஆவணத்தின் வாயிலாகப் பாத்தியப்பட்டது என்றால் வில்லங்கச்சான்றைப் பார்த்தேன், ஆனால் அதைப்பற்றி சரியாகத் தெரியவில்லை. நான் எந்த வருடத்திலிருந்து வில்லங்கம் போட்டுப் பார்த்தேன் என்றால் 40 வருட காலத்திற்கு வில்லங்கச் சான்று பெற்றுப் பார்த்தேன். கருப்புச்சாமி இறந்துபோன சின்னச்சாமிகவுண்டருக்கு மூத்த தாரம் உயிருடன் இருக்கும்போதே இளைய தாரத்தை திருமணம் செய்து அதன் மூலம் பிறந்தவர் என்றால் நான் விசாரித்த வரையில் அப்படியில்லை. வழக்கு தாக்கல் செய்த பிறகு விசாரித்துப்பார்த்தேனா என்றால் விசாரித்துப் பார்த்தேன், அவ்வாறு தெரியவரவில்லை.

3. நான் எதிர்வாதவுரையிலோ, வாக்குமூலத்திலோ வழக்கு தாக்கல் செய்த ஈஸ்வரி, சின்னச்சாமிகவுண்டரின் மகளே அல்ல என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் எனக்கு சரியாகத் தெரியவில்லை. மேற்படி விபரங்கள் எதுவும் நிரூபண வாக்குமூலத்திலும், எதிர்வழக்குரையிலும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் அவர்களுடைய உறவுமுறையை மறைமுகமாக ஒப்புக்கொண்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் குறித்து 3–ம் பிரதிவாதி கருப்புச்சாமி பெயரளவில் ஆவணம் ஏற்படுத்தியுள்ளதாகவும், அவருக்கு உரிமையே இல்லாமல் மற்ற வாரிசுகளின் பாகத்தை ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் கிரையம், ஒப்பந்தம் போன்ற ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளதாகச் சொன்னால் சரியல்ல. 3–ம் கருப்புச்சாமியும், அவரது வாரிசுகள் வழக்கில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. இறந்துபோன சின்னச்சாமிகவுண்டரின் பாகம் மட்டும் தான் 3–ம் பிரதிவாதி கருப்புச்சாமிக்கு வரும் என்றும், அதைத் தான் 3–ம் பிரதிவாதி கருப்புச்சாமி வில்லங்கப்படுத்த உரிமையுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. சின்னச்சாமிகவுண்டர் அவருக்குள்ள பாகத்தைப் பொறுத்து 3–ம் பிரதிவாதி கருப்புச்சாமிக்கு சட்டப்படியான ஆவணங்கள் மூலம் பாத்தியப்படுத்தி வைத்துள்ளாரா என்றால் தெரியவில்லை.

5. சின்னச்சாமிகவுண்டர் 09.12.2005 அன்று இறப்பதற்கு முன்பே இந்து வாரிசுரிமை திருத்தப்பட்டச் சட்டப்படி 20.12.2004 அன்றே தாவா சொத்தில் 8, 9 பிரதிவாதிகளுக்கு உரிமை வந்துவிட்டது என்றால் தெரியவில்லை. நான் கருப்புச்சாமியுடன் சேர்ந்துகொண்டு 8, 9 பிரதிவாதிகளின் பாகத்தையும் சேர்த்து எழுதி வாங்கிக்கொண்டதாகச் சொன்னால் சரியல்ல. சொத்து அபிவிருத்தி செய்யவில்லை என்றால் நான் பென்சிங் அமைத்து, ஏற்கனவே இருந்த தென்னை மரங்களை பராமரித்தும், புதிதாக தென்னங்கன்றுகள் நட்டும் பராமரித்து வருகிறேன். மேற்படி விபரத்தை நான் எதிர்வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன்.

6. தாவா சொத்தில் 8, 9 பிரதிவாதிகளுக்கும் பாத்தியம் உள்ளது என்றும், அவர்களும் சொத்தின் கூட்டு உரிமையாளர்கள் என்றும், அவர்களுக்கு உள்ள பாகத்தை நான் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2024.10.30 15:08:16 +0530